# தீயபழக்கவழக்கங்களை முறித்தல்

## மதுபானம், போதைப்பொருள், ஒழுக்கக்கேடு ஆகியவற்றிற்கு எதிராக இயேசு வெற்றியைத் தருகிறார்.

(சிறுவர்களுக்குப் போதிப்பவர்கள் C9b ஐ வாசிக்கவும்)

**ஜெபம்:** "அன்பான தேவனே, கிறிஸ்துவில் உள்ள பெரிதான சுதந்திரத்தைப் புரிந்து கொள்ளவும் அனுபவிக்கவும் உதவி செய்யவும்!"

1. **உங்கள் மனதையும் இருதயத்தையும் தேவ வார்த்தையைக் கொண்டு ஆயத்தப்-படுத்துங்கள்**
தீமையின் பிடியில் இருந்து நம்மை விடுவிக்கும் தேவனுடைய வல்லமையைப் பற்றி மாற்கு 5:1-20 ல் காண்க:

- அசுத்த ஆவியால் அலைக்கழிக்கப்பட்ட மனிதனுக்கு இயேசு என்ன செய்தார்?
- சாத்தானிடம் இருந்து விடுவிக்கப்பட்ட மனிதனை இயேசு எங்கு அனுப்பினார்? தங்கள் வாழ்க்கையில் அவர்கள் செய்த பாவத்தை தேவன் எவ்வாறு நோக்கி செயல்படுகிறார் என்பது குறித்து பவுல் எபேசிய சபை மக்களுக்கு போதித்தார்.
- பவுல் எபேசியருக்கு எழுதிய கடிதத்தை வாசிக்கவும்
- தங்கள் வாழ்க்கையில் தாங்கள் செய்த பாவத்தில் இருந்து மக்கள் இயேசுவின் வல்லமையால் விடுதலை பெற உதவும் ஆறு நிலைகளை எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து படித்து அறியவும்.

**முதல் நிலை:** ***நம்மை ஆசீர்வதிப்பதாக நமது பரிசுத்தமான தேவன் தந்த வாக்குத்தத்தத்தில் நம்பிக்கையாய் இருங்கள்***

கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்கு ஏற்கனவே தந்துள்ள ஆசீர்வாதங்களை எபேசியர் 1:3-14 ல் காண்க.

- உலகத் தோற்றத்திற்கு முன்னரே அவர் நம்மை தேர்ந்தெடுத்து, எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாலும் நம்மை ஆசீர்வதித்தார்.
- குற்றமற்றவர்களாகவும், பரிசுத்தம் உள்ளவர்களாகவும், பாவங்கள் யாவும் மன்னிக்கப் பட்டவர்களாகவும் இருக்க அவர் நம்மைத் தெரிந்து கொண்டார்.
- அவர் நமக்கு ஞானத்தையும் அறிவையும் தருகிறார்
- பரலோகத்தில் அவரோடு இருக்கப்போகும் நாள் வரையிலும் நம்மை அவரது பரிசுத்த ஆவியானவர் முத்திரையிட்டு, தமது கரங்களில் பாதுகாப்பாக வைத்துக் கொள்கிறார்.

தேவனைத் தழுவிக் கொள்ளவும், இந்த வாக்குத் தத்தங்களுக்காக நன்றி செலுத்தவும் ஆயத்தப்பட உங்கள் மந்தைக்கு உதவுங்கள்.

**நிலை 2:** ***இயேசுவில் உள்ள விசுவாசத்தால் பெற்றுக்கொள்ளத் தக்க தேவனின் அளவற்ற கிருபையைக் கேளுங்கள்***

தேவ கிருபையைப் பெற்றுக்கொள்ளவும், தங்கள் பாவத்தில் இருந்தும் அதன் தண்டனையில் இருந்தும் தப்பித்துக் கொள்ள மக்களுக்கு இருக்கும் ஒரே வழியை எபேசியர் 2:1-10 ல் காண்க.

- இரட்சிக்கப்பட நாம் என்ன செய்ய வேண்டும் (வசனம் 8).
- தேவ கிருபையையும் இரக்கத்தையும் யார் மூலமாக நாம் பெற்றுக் கொள்ள முடியும்?

**நிலை 3:** ***அறிக்கையிட்டு தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ள ஒருவருக்கு ஒருவர் உதவுங்கள்***

இந்த உலகில் விசுவாசிகளுக்கு வழிகாட்டுதலையும் ஊக்கமளித்தலையும் தேவன் யார் மூலமாக கொண்டு வருகிறார் என்பதை எபேசியர் 3:10-5:21 ல் காண்க.

- ஒருவருக்கொருவர் வளர உதவி செய்யும்படி தேவன் முழுமந்தையையும் எவ்வாறு ஆயத்தப்படுத்துகிறார் என்பதை எபே. 4:11-16 ல் காண்க.
- மது, போதை, காமம் ஆகிய பாவங்களுக்கு அடிமையானவனுக்கு அவற்றில் இருந்து விடுபட ஒரு பலமான சமுதாயத்தின் ஆதரவு தேவைப்படுகிறது.

- ஒருவன் கெட்ட பழக்கங்களிலிருந்து விடுபட்டு, தன் பாவத்தை உண்மையாய் அறிக்கையிட்டு, வாழ்க்கையை இயேசுவுக்கு அர்ப்பணிக்க, அன்பாக அக்கறை எடுத்துக் கொள்ளும் ஒரு விசுவாசியின் உதவி தேவைப்படுகிறது.
- இந்த "அக்கறை செலுத்துபவர்," பாவத்துக்கு அடிமையானவருக்கு அவரது வாழ்க்கையில் தேவைப்படும் மாற்றத்தை ஒத்துக்கொள்ள உதவுகிறார்.
- சாக்குப்போக்கு கூறாமல், தனது பாவத்தை எதிர்கொள்ள, பாவத்துக்கு வயப்பட்டவருக்கு தன் குடும்பத்தின் அன்பு தேவைப்படுகிறது.
- பாவவயப்பட்டவரை குணப்படுத்த தேவன் நண்பர்களை உபயோகப் படுத்துகிறார். அவர்கள் அவருக்கு வாழ்க்கையில் தேவைப்படும் மாற்றத்தை உருவாக்க ஊக்கப்படுத்துகின்றனர். சாத்தான் சோதிக்கும் போது தேவ வல்லமையைப் பற்றி நினைவுகூர உதவுகின்றனர். இளம் இராஜாவான யோசுவாவுக்கு ஞானமாக ஆலோசனை கூறிய யோய்தாவைப் போன்றவர்கள் இவர்கள் (2 இராஜா. 12:2).

பாவவயப்பட்டவருக்கு 5 வகையான ஆதாரங்களில் இருந்து உதவி தேவைப்படுகிறது

1) தனக்காக ஜெபிக்கும்படி நம்பிக்கையோடு கேட்க ஒரு குழு
2) அன்பான ஆலோசகர்
3) கேட்பவர்களுக்கு தேவன் அளிக்கும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை
4) கலா. 5:13-26 கூறுவது போல தனது பாவ சுபாவத்தை சிலுவையில் அறையத் தேவையான சொந்தத் தீர்மானம்
5) தாவீதின் மக்கள் அவனிடம் பேசி ஊக்கப்படுத்தியது போல (1 இராஜா. 1) ஊக்கப்படுத்தி பாவத்தைப் பற்றி உண்மையாக விவாதிக்கும் குடும்பத்தின் ஆதரவு

**நிலை 4:** ***கெட்ட பழக்கவழக்கத்தின் காரணகாரியத்தை உய்த்தறிந்து அதை விடும்வரை தீர்மானமாயிருப்பது***

பாவத்தை உண்டாக்கவும் அதை விட்டு விடவும் கூடிய மனோபாவங்களை எபே. 4:22-32 ல் காண்க. மக்களின் வாழ்க்கையில் இருக்கும் அநேக பிரச்சினைகளுக்கான காரணத்தை யாக்கோபு 3:13-4:3 ல் காண்க.

மக்களுடைய பலவீனத்துக்குக் காரணமான அடிப்படை மனோ பாவத்தை மாற்ற முயல வேண்டும். மனோபாவத்தால் ஏற்படும் அறிகுறிகளில் (மோசமான விளைவுகள்) மட்டும் கவனம் செலுத்துவதால் பயனில்லை.

தேவன் சாத்தானிடம் இருந்து நமது சித்தத்தை விடுவித்து சரி எது என்பதை தெரிந்தெடுக்கும் வல்லமையை நமக்குத் தருகிறார்.

**நிலை 5:** ***நமது கெட்ட பழக்கத்தை தைரியமாகவும் தீர்மானமாகவும் தாக்குதல்***

பாவத்தை எதிர்க்கும் வழியை எபே. 5:3-14 ல் காண்க:

- அறிக்கை இடும்போது கிறிஸ்துவின் ஒளியில் வெளியரங்கமாகும் மனோபாவத்தையும், பாவத்தையும் காண்க
- நோயினாலும் பாவத்தினாலும் துன்பப்படுவோரை மூப்பர்கள் எவ்விதம் கையாண்டனர் என்பதை யாக்கோபு 5:13-16ல் காண்க.

**நிலை 6:** ***சாத்தானையும், அவனது பிசாசுப் படையையும், அவைகளின் வஞ்சகத்தையும் எதிர்த்து கடுமையாகப் போர் புரிக***

சாத்தானின் சோதனைகளில் இருந்து எவ்வாறு பாதுகாப்பு பெற முடியும் என்பதை எபே. 6:10-18 ல் காண்க.

- தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தின் ஒவ்வொரு உறுப்பையும் அணிவது என்பதின் அர்த்தம் என்ன?
- தீய எதிர்ப்புகளை புறங்காண நாம் எவ்வளவு தூரம் ஜெபிக்க வேண்டும் என்பதை வசனம் 18 ல் காண்க.
- ஜெபத்தின் குணமாக்கும் வல்லமையை மாற்கு 9:14-29 ல் காண்க

**2. வரும் வாரத்தில் செய்ய வேண்டியவற்றை உடன் வேலையாட்களுடன் திட்டமிடுக**

- இந்த 6 நிலைகளையும் கொண்டு பாவத்துக்கு அடிமைப்பட்டோருக்கு ஆலோசனை வழங்க முதிர்ச்சியுள்ள விசுவாசிகளைப் பயிற்றுவிக்கவும்.
- கெட்டபழக்கங்களுக்கு அடிமைப்பட்டோருக்கு சிறு குழுவாக ஆலோசனை கூறி ஜெபிக்கவும். இதற்காக நீங்கள் ஒரு புதிய குழுவை அமைக்க வேண்டி வரும்.

3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் வேலையாட்களோடு திட்டமிடவும்

தற்போதைய தேவைகளுக்கும் வட்டார பழக்க வழக்கங்களுக்கும் பொருந்தும் செயல்பாடுகளைத் தெரிந்து கொள்ளவும். எபே. 3:14-21 ல் எபேசு சபைக்காக பவுல் ஜெபித்ததை ஜெபிக்கவும். தீய பழக்கங்களிலிருந்து விடுபட ஆறு படிகளை விளக்கவும், பகுதி I.

தேவனைத் துதியுங்கள். ஏனெனில் அவரது ஆவி நம்மை மாற்றுகிறது. தீயபழக்கங்களிலிருந்து விடுபட்ட வெற்றியை சாட்சியாக அறிவிக்குமாறு விசுவாசிகளைக் கேளுங்கள்.

அசுத்த ஆவியின் பிடியில் இருந்து விடுபட்ட மனிதனின் கதையைக் கூறுங்கள் அல்லது நடித்துக் காட்டுங்கள். அதைக் கூற உதவியாளர்களை ஆயத்தப்படுத்துங்கள். அந்த மனிதனுக்கு இயேசு செய்ததை முதலில் யாவரும் கேட்கும்படி வேண்டிக்கொள்ளுங்கள். பின் அவர்கள் அறிந்து கொண்டது என்ன என்று கேளுங்கள்.

தீயபழக்கத்திற்கு எதிரான வெற்றியை வெளிப்படுத்திக் காட்டவும்

ï **திருவாளர்** ஏமாற்றப்பட்டவர், குடித்துவிட்டு போதையில் இருப்பதாக நடிக்கவும். கைகளில் இருக்கும் அழுக்கை துடைக்க முயலுகிறார். நேற்று இரவு நடந்த பலவீனத்திற்காக வருத்தப்படுவதாகக் கூறுகிறார்.

திருவாளர் சர்ப்பம், சாத்தானின் பொய்களை அவரைப் பார்த்து கத்திக்கத்தி கூறுகிறான்.

- நீ ஒன்றுக்கும் உதவாதவன். இப்போது கடவுளால் உன்னை இரட்சிக்க முடியாது. "இந்த சோதனையில் இருந்து நீ ஜெயிக்க முடியாது." (கொடிய சிரிப்பு).
- திருவாளர் ஆலோசகர், ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து, திருவாளர் ஏமாற்றப்பட்டவரைப் பார்த்துக் கூறுகிறார்: "இயேசுவின் இரத்தம் உன்னைக் கழுவும்."
- திருவாளர் ஏமாற்றப்பட்டவர், தனது குடிப்பழக்கத்தையும், பாவத்தையும் கழுவுமாறு இயேசுவிடம் வேண்டுகிறார். அவர் தனது கையை தண்ணீரில் கழுவி ஆச்சரியத்தோடு கூவுகிறார், "நான் சுத்தமாக இருக்கிறேன்."

குழந்தைகள், பெரியவர்களுக்காக தாங்கள் தயாரித்த, கவிதை, நாடகம், கேள்விகளை பெரியோர் முன் வைக்கவும்.

கெட்டப்பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு உதவி செய்ய, அந்த வாரத்தில் செய்யும்படி திட்டமிட்டிருந்த காரியங்களை **விளக்கி** ஏற்பாடு செய்யவும்.

இரண்டு அல்லது மூன்றுபேர் அடங்கிய குழுக்களாக அமர்ந்து, விசுவாசிகள் ஜெபித்து, தங்கள் திட்டங்களை உறுதிப்படுத்தி, ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தவும்.

கர்த்தரின் பந்திக்கு துவக்கமாக யோவான் 6:25-35 ஐ வாசிக்கவும். இயேசு 5000 பேரை போஷித்த பின் சிலர் இன்னும் கேட்டனர். அவர் அதற்குப்பதில் நித்திய ஜீவனை அளிக்கும் வான அப்பத்தை தருவதாகக் கூறினார். 1 கொரி.10:16-17 விளக்குவது போல, கர்த்தரின் பந்தியில் நாம் இந்த அப்பத்தையே உண்கிறோம். எல்லோருமாக கலா.5:24 ஐ மனனம் செய்க.

Copyright © 2003 by Paul-Timothy Trainers. Download freely from www.Paul-Timothy.net